8th August 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) &(இ) குளச்சல், பத்மநாபபுரம் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் வசதியை அதிகப் படுத்துவதன் பொருட்டு, பரிசீலனை செய்யப்படவேண்டிய திட்டங் களில் மாம்பழத்துறை அணை கட்டும் திட்டமும் ஒன்றாகும். இத் திட்டத்தைப் புலனாய்வு செய்யும்பணி நிறைவேறி வருகின்றது. அது முடிவடைந்து, மேற்படி அணை கட்டுவதற்கு ஆகும் மதிப் பீட்டுச் செலவை அறிந்த பிறகுதான் தலைமைப் பொறியாளர் அவசியமான செயற்குறிப்புகளை அரசாங்கத்துக்கு அனுப்பி வைப்பார்.

* 235 Q.—SRI V. SANKARAN: Will the hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government propose to implement any scheme for providing protected water supply to the panchayats of Chittode, Masianur, Perunthurai, Chennimalai and Ramalingam T.B. Santorium in Coimbatore district from the river Cauvery; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) பெருந் துறைக்கும் சித்தோடு, நச்சியனூர் ஆகிய பஞ்சாயத்துக்களுடன் வழியிலுள்ள பிற பஞ்சாயத்துக்கள், மற்றும் பெருந்துறை இராம லிங்கம் காச நோய் நலம் பேண் மருத்துவமனை (Tuberculosis Sanatorium) ஆகிய வற்றிலும் நீர் வழங்கும் திட்டத்திற்காக தொடக்கச் செயற் குறிப்புக்கள் வரப்பெற்று, அவை பரிசீலனையில் உள்ளன.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: தலைவர் அவர்களே, சித்தோடு, மசியனூர் முதலிய பிராந்தியங்களுக்கு காவேரி ஆற்றி லிருந்து நீர் வழங்கும்போது, பக்கத்திலுள்ள பிராமண பெரிய அக்கிரஹாரம், வீரப்பன் சத்திரம் என்ற இடங்களையும் இணைக்கும் உத்தேசம் உண்டா? 9-30 a.m.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், இல்லை.

டவுன் பிளானிங் திட்டம்

* 236 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு:** கனம் சுகாதார அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரத்தில் டவுன் பிளானிங் திட்டத்தின் கீழ் ஏதேனும் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில், யார் யார் நிலம் எவ்வளவு எடுக்கப்பட்டிருக் கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) இந்த கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு: தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரத் தில் டவுன் பிளானிங் திட்டத்தின்கீழ் அயன் நஞ்சை நிலங்களில் அனேக ஏக்கர்களை சர்க்கார் எடுத்திருப்பதாக கெஸட்டில் நோட்டி பிகேஷனும் வந்திருக்கிறது. ஆனால், அப்படியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு என்ன காரணம்?

[8th August 1966

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அக்வொயர் செய்து நோட்டிஃபிகேஷன் செய்கின்ற ஸ்டேஜில் இருந்தபோதுதான் இது நிறுத்தப்பட்டது. இப்போது அக்வொயர் செய்யவேண்டிய அவசியமில்லை. அக்வொயர் செய்கின்ற நேரத்தில் முனிசிபாலிட்டி களுக்கு கொடுத்து பின்னுல் அக்வொயர் செய்து கொள்ளலாம், இப்போது தேவையில்லை என்று முடிவு செய்திருப்பதால்தான் இல்லை என்று பதில் கூறினேன்.

சினிமாக்களுக்கு அனுமதி

***237 கேள்வி.—திரு. நா. இராசாங்கம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) டூரிங் சினிமாக்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அனுமதி (Licence,) வாங்க வேண்டுமென்று அரசாங்கம் ஏதேனும் விதி பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து அமல் நடத்தப்படும் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No.
(b) Does not arise.

திரு. செ. மாதவன் : பெர்மனன்ட் தியேட்டர்களுக்கு நிரந்தர மாக லைசென்ஸ் கொடுப்பதுபோன்று, இப்படிப்பட்ட டூரிங் தியேட்டர்களுக்கு மட்டும் ஆறு மாதம், ஒரு வருடம் என்று கொடுக்கவேண்டிய அவசியமென்ன ? இவற்றிற்கும் நிரந்தரமாக லைசென்ஸ் கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், ஃபிலிம் சேம்பர் ஆஃப் காமர்ஸ் ரெப்ரஸென்டேட்டிவ்ஸ் வந்திருந்து அவர்களுடைய கஷ்டங்களை எடுத்துக் கூறினர்கள். அப்போது டூரிங் சினிமாக் களுக்கு இரண்டு வருடங்களுக்கு அனுமதி கொடுக்கலாமா என்று கேட்டபோது, அவ்விதம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதியதால்தான் இதை ஓராண்டு என்று இப்போது போட்டிருக்கிறோம்.

Public Health Engineering Division

* 238 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the works proposed to be executed by the Public Health Engineering Division at Madurai?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A statement[a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன் : குறிப்பாக இதில் மதுரை சப்ளைத் திட்டம் முதலாவதாக போட்டிருக்கிறது. இதில் முக்கியமாக பல மெயின்களை மாற்றவேண்டும். ஆகவே, இதிலிருக்கின்ற அவசரத்தை யும் அவசியத்தையும் கருதி முதலாவதாக எடுத்துக்கொண்டு சீக்கிரமாக நிறைவேற்றி வைப்பதற்கு சர்க்கார் உத்தரவு பிறப் பிக்குமா ?

---

[a] Printed as Appendix IV on page 130.